58. A dealer bought a television set for a Rs. 10,000 and sold it for Rs. 12,000. Find the profit/loss made by him for one television set.

(A) Loss Rs. 2,000 (B) Profit Rs. 2,000

(C) Profit Rs. 10,000 (D) Loss Rs. 10,000

ஒரு மொத்த வியாபாரி ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை ரூ. 10,000க்கு வாங்கி ரூ. 12,000க்கு விற்கிறார். ஒரு பெட்டியின் இலாபம்/நட்டத்தைக் காண்க.

(A) ரூ. 2,000 நட்டம் (B) ரூ. 2,000 இலாபம்

(C) ரூ. 10,000 இலாபம் (D) ரூ. 10,000 நட்டம்

24. Sara baked cakes for the school festival. The cost of one cake was Rs. 55. She sold 25 cakes and made a profit of Rs. 11 on each cake. Find the selling price of the cakes

(A) Rs. 1,400 (B) Rs. 1,375

(C) Rs. 1,650 (D) Rs. 1,550

ஒரு பள்ளியின் விழாவிற்காகச் சாரா, கேக் செய்தாள். ஒரு கேக்கின் அடக்கவிலை ரூ. 55 ஆகும். அவள் ஒவ்வொரு கேக்கையும், ரூ. 11 லாபத்திற்கு விற்கிறாள். 25 கேக்குகளை விற்றிருந்தால், விற்பனை விலையை காண்.

(A) ரூ. 1,400 (B) ரூ. 1,375

(C) ரூ. 1,650 (D) ரூ. 1,550

30. A bicycle marked at Rs. 1,500 is sold to a 1,350. What is the percentage of discount?

(A) 20% (B) 15%

(C) 10% (D) 7%

ஒரு மிதிவண்டியின் விலை 1,500 ரூபாய் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை ரூபாய் 1350க்கு விற்றால் தள்ளுபடி சதவீதம் என்ன?

(A) 20% (B) 15%

(C) 10% (D) 7%

5. A bicycle marked as Rs. 1,500 is sold for Rs. 1,350. What is the percentage of discount?

(A) 9% (B) 10%

(C) 12% (D) 15%

ஒரு மிதிவண்டியின் விலை ரூ. 1,500 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ரூ 1,350 க்கு விற்றால் தள்ளுபடி சதவீதம் என்ன?

(A) 9% (B) 10%

(C) 12% (D) 15%

72. The list price of a frock is Rs. 220. A discount of 20% on sales is announced. What is the amount of discount on it and its selling price?

(A) 22, 86
(B) 33, 98
(C) 55, 183
(D) 44, 176

ஒரு உடையின் பட்டியல் விலை 220 ரூபாய். அதன் விற்பனையில் 20% தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உடையின் மேல் தள்ளுபடி எவ்வளவு? அதன் விற்பனை விலை என்ன?

(A) 22, 86
(B) 33, 98
(C) 55, 183
(D) 44, 176

7. By selling a car for Rs. 2,00,000, a man suffered a loss of 20% the cost price of the car is

(A) 2,20,000
(B) 2,40,000
(C) 2,50,000
(D) 3,00,000

ரூ. 2,00,000க்கு ஒரு காரை விற்பனை செய்ததில் ஒருவர் 20 சதவிகித நஷ்டமடைந்தார். அவர் கார் வாங்கிய விலையானது

(A) 2,20,000
(B) 2,40,000
(C) 2,50,000
(D) 3,00,000

63. A man bought an old bicycle for ₹1,250. He spent ₹250 on its repairs. He then sold it for ₹1,400. Find his loss percentage.

(A) 6.67%
(B) 6.60%
(C) 6.68%
(D) 6.65%

ஒரு நபர் ஒரு பழைய மிதிவண்டியை ₹1,250க்கு வாங்கினார். அதனைச் சீர்படுத்த ₹250 செலவு செய்தார். அவர் அதனை ₹1,400க்கு விற்றார். அவரின் நட்ட சதவீதத்தைக் காண்க.

(A) 6.67%
(B) 6.60%
(C) 6.68%
(D) 6.65%

58. A man bought an old bicycle for Rs. 1,250. He spent Rs. 250 on its repairs. He then sold it for Rs. 1,400. Find his gain or Loss percentage

(A) Loss 6.67 %

(B) Gain 6.67 %

(C) Loss 20 %

(D) Loss 6 %

ஒரு நபர் ஒரு பழைய மிதி வண்டியை, ரூ. 1,250க்கு வாங்கினார். அதனை சீர்படுத்த ரூ. 250 செலவு செய்தார். அவர் அதனை ரூ. 1,400க்கு விற்றார். அவருடைய லாபம் அல்லது நட்டத்தை காண். (சதவீதத்தில்)

(A) 6.67 % நட்டம்

(B) 6.67 % லாபம்

(C) 20 % நட்டம்

(D) 6 % நட்டம்

126. A man bought a car for Rs. 2,00,000 and spent Rs. 50,000 on its repair. He sold it for Rs. 3,00,000. What is the profit percentage?

(A) 20%

(B) 10%

(C) 50%

(D) 25%

ஒருவர் ரூ. 2,00,000க்கு ஒரு கார் வாங்கி அதனை பழுது பார்ப்பதற்காக ரூ. 50,000 செலவு செய்தார். அந்த காரை அவர் ரூ. 3,00,000க்கு விற்பனை செய்தால், அவர் அடைந்த இலாப சதவீதம் என்ன?

(A) 20%

(B) 10%

(C) 50%

(D) 25%

199. A man bought an old bicycle for Rs. 1,500. He spends Rs. 500 on its repair and sells it for Rs. 1,800. Find the percentage of his loss.

(A) 10%

(B) 15%

(C) 20%

(D) 5%

ஒருவர் ரூ. 1,500-க்கு ஒரு பழைய மிதிவண்டியை வாங்கி அதில் ரூ. 500-க்கு பழுதுகளை நீக்குகிறார். முடிவில் அவர் அந்த மிதிவண்டியை ரூ. 1,800-க்கு விற்கிறார் எனில் அவர் அடையும் நஷ்ட சதவிகிதத்தைக் காண்.

(A) 10%

(B) 15%

(C) 20%

(D) 5%

76. A refrigerator is purchased for Rs. 14,355, including sales tax. If the actual cost price of the refrigerator is Rs. 13,050, find the rate of sales tax.

(A) 11% (B) 8%

(C) 9% (D) 10%

ஒரு குளிர்சாதனப் பெட்டியை, விற்பனை வரியோடு சேர்த்து ரூ. 14,355-க்கு விற்கப்படுகிறது. அதன் உண்மையான வாங்கிய விலை ரூ. 13,050 எனில் விற்பனை வரி சதவீதத்தைக் காண்க.

(A) 11% (B) 8%

(C) 9% (D) 10%

**99. Ram sold a watch at ₹ 405 and earned a profit of 20%. What was his cost price?**

(A) ₹ 337.50 (B) ₹ 87.50

(C) ₹ 237.50 (D) ₹ 237

ராம் என்பவர் 20% லாபத்திற்கு ரூ. 405-க்கு ஒரு கடிகாரத்தை விற்றால் அதன் அடக்க விலை என்ன?

(A) ₹ 337.50 (B) ₹ 87.50

(C) ₹ 237.50 (D) ₹ 237

57. Sasi purchased a house for ₹ 27,75,000 and spent ₹ 2,25,000 on its interior decoration. He sold the house to make a profit of 40%. What is the selling price of the house?

(A) ₹ 31,20,000 (B) ₹ 36,00,000

(C) ₹ 42,00,000 (D) ₹ 48,00,000

சசி ஒரு வீட்டை ₹ 27,75,000 க்கு வாங்கினார். பின்பு உட்புறங்களை ₹ 2,25,000 க்கு அழகுபடுத்தி அதை 40% இலாபத்திற்கு விற்றார் எனில் அந்த வீட்டின் விற்பனை விலை என்ன?

(A) ₹ 31,20,000 (B) ₹ 36,00,000

(C) ₹ 42,00,000 (D) ₹ 48,00,000

136. A man had Rs. 75 lakhs with him. He spent 48 lakhs and 85 thousands to buy a building. How much money is left with him?

(A) 40 lakhs

(B) 26 lakhs 15 thousand

(C) 20 lakhs 25 thousand

(D) 33 lakhs

ஒரு நபர் தன்னிடம் ரூ.75 இலட்சம் வைத்துள்ளார். அவர் ஒரு கட்டிடத்தை வாங்குவதற்காக ரூ.48 இலட்சத்தி 85 ஆயிரம் செலவு செய்தார் எனில் அவரிடம் எவ்வளவு பணம் மீதி இருக்கும்?

(A) 40 இலட்சம்

(B) 26 இலட்சத்தி 15 ஆயிரம்

(C) 20 இலட்சத்தி 25 ஆயிரம்

(D) 33 இலட்சம்

113. Raman buys a washing machine for Rs. 13,500 and sells it at a loss of 12%. What is the selling price of the washing machine?

(A) 11,880 (B) 11,800

(C) 13,500 (D) 11,870

இராமன் துணி துவைக்கும் இயந்திரத்தை ரூ. 13,500 க்கு வாங்குகின்றார். இதனை 12% நட்டத்திற்கு விற்றார் எனில் துணி துவைக்கும் இயந்திரத்தின் விற்பனை விலை என்ன?

(A) 11,880 (B) 11,800

(C) 13,500 (D) 11,870

57. A fruit seller bought 12 boxes of grapes at Rs. 160 each. Two boxes were damaged. He sold the remaining boxes at Rs. 200 each then profit per cent is

(A) 4.258 (B) 4.33

(C) 4.167 (D) 4.52

ஒரு பழ வியாபாரி 12 பெட்டி திராட்சைகளை ஒரு பெட்டி ரூ. 160 என்ற வீதம் வாங்கினார். அதில் இரண்டு பெட்டிகள் அழுகிவிடுகிறது. மீதமுள்ள பெட்டிகளை ஒரு பெட்டிக்கு ரூ. 200 வீதம் விலைக்கு விற்கிறார் எனில் இலாப சதவீதம்

(A) 4.258 (B) 4.33

(C) 4.167 (D) 4.52

61. A fruit seller bought 8 boxes of grapes at Rs.150 each. One box was damaged. He sold the remaining boxes at Rs.190 each. Find the profit / loss percentage.

(A) Profit 130 %

(B) Profit 10.83 %

(C) Loss 130 %

(D) Loss 10.83 %

ஒரு பழ வியாபாரி 8 பெட்டி, திராட்சைகளை, ஒரு பெட்டி ரூ.150 வீதம் வாங்கினார். அதில் ஒரு பெட்டி திராட்சை அழுகி விடுகிறது. மீதமுள்ள பெட்டிகளை ஒரு பெட்டி ரூ.190 என்ற விலைக்கு விற்கிறார். இலாப / நட்ட சதவீதம் காண்.

(A) லாபம் 130 %

(B) லாபம் 10.83 %

(C) நட்டம் 130 %

(D) நட்டம் 10.83 %

154. A fruit seller bought 10 boxes of grapes at ₹. 210 each. One box was damaged. He sold the remaining boxes at ₹. 250 each. Find the profit / loss percentage

(A) 7.14% loss
(B) 10.14% loss
(C) 7.14% profit
(D) 10.14% profit

ஒரு பழ வியாபாரி 10 பெட்டி திராட்சைகளை ஒரு பெட்டி ரூ. 210 வீதம் வாங்கினார். அதில் ஒரு பெட்டி திராட்சை அழுகி விடுகிறது. மீதமுள்ள பெட்டிகளை ஒரு பெட்டி ரூ. 250 என்ற விலைக்கு விற்கிறார். இலாப / நட்ட சதவீதம் காண்

(A) 7.14% நட்டம்
(B) 10.14% நட்டம்
(C) 7.14% லாபம்
(D) 10.14% லாபம்

26. A man buys 10 articles for Rs. 8 and sells them at the rate of Rs. 1.25 per article. His gain is

(A) 20%
(B) 50%
(C) $19\frac{1}{2}\%$
(D) $56\frac{1}{4}\%$

ஒரு மனிதன் 10 புதினங்கள் ரூ. 8-க்கு வாங்கி அவற்றை ரூ. 1.25 வீதம் 10 புதினங்களை விற்றார். அவருடைய லாபம்

(A) 20%
(B) 50%
(C) $19\frac{1}{2}\%$
(D) $56\frac{1}{4}\%$

64. An almirah is sold at Rs. 5,225 after allowing a discount of 5%. Find its marked price.

(A) Rs. 5,000 (B) Rs. 5,500

(C) Rs. 6,500 (D) Rs. 5,575

ஒரு அலமாரி 5% தள்ளுபடியில் ரூ.5225 /- க்கு விற்கப்படுகிறது எனில், அதன் குறித்த விலை என்ன?

(A) Rs. 5,000 (B) Rs. 5,500

(C) Rs. 6,500 (D) Rs. 5,575

51. Sanjay bought a bicycle for Rs. 5,000. He sold it for Rs. 600 less after two years. Find the loss percentage.

(A) 10% (B) 14%

(C) 8% (D) 12%

சஞ்சய் மிதி வண்டியை ரூ.5,000க்கு வாங்கினார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு ரூ.600 குறைத்து விற்றார். எனில் நட்ட சதவீதத்தைக் காண்.

(A) 10% (B) 14%

(C) 8% (D) 12%

52. A trader buys an article for Rs. 1,200 and marks it 30% above the C.P. He then sells it after allowing a discount of 20%. Find the profit percent.

(A) 5% (B) $4\frac{1}{2}$%

(C) 4% (D) 6%

ஒரு வியாபாரி ஒரு பொருளை ரூ.1,200 வாங்கினார். பின்பு அதன் அடக்கவிலைக்கு மேல் 30% குறித்த விலைக்கு 20% தள்ளுபடி கொடுக்கிறார். விற்ற விலையின் லாபம் % என்ன?

(A) 5 % (B) $4\frac{1}{2}$%

(C) 4% (D) 6%

92. The price of an item inclusive of VAT is Rs. 9,720. If VAT is 8% then the cost price of the item is

(A) 9,000 Rs. (B) 9,100 Rs.

(C) 9,120 Rs. (D) 9,200 Rs.

மதிப்புக்கூட்டு வரியுடன் ஒரு பொருளின் விலை ரூ. 9,720. மதிப்பு கூட்டு வரி 8% எனில் அதன் அடக்க விலை என்ன?

(A) ரூ. 9,000 (B) ரூ. 9,100

(C) ரூ. 9,120 (D) ரூ. 9,200

55. Mohammed sells a shirt costing Rs. 300 at 20% loss to Salim. Salim sells it at a profit of 10%. At what price did Salim sell the shirt?

(A) Rs. 264 (B) Rs. 270

(C) Rs. 280 (D) Rs. 330

முகமது ரூ. 300 அடக்கவிலை கொண்ட சட்டையை 20% நஷ்டத்திற்கு சலீமிற்கு விற்றார். சலீம் அதை 10% லாபத்திற்கு விற்றால், சலீம் என்ன விலைக்கு சட்டையை விற்றார்?

(A) ரூ. 264 (B) ரூ. 270

(C) ரூ. 280 (D) ரூ. 330

7. A trader buys an article for Rs. 1,200 and marks it 30% above the cost price. He then sells it after allowing a discount of 20%. Find the selling price and profit percent.

(A) Rs. 1,560, 6% (B) Rs. 1,428, 4%

(C) Rs. 1,248, 4% (D) Rs. 1,650, 6%

ஒரு வியாபாரி ஒரு பொருளை ரூ. 1,200க்கு வாங்கினார். பின்பு அதன் அடக்கவிலைக்கு மேல் 30% உயர்த்தி, குறித்த விலை ஆக்கினார். இதற்கு 20% தள்ளுபடி கொடுத்து விற்றார் எனில், விற்பனை விலை மற்றும் இலாப சதவீதம் காண்க.

(A) ரூ. 1,560, 6% (B) ரூ. 1,428, 4%

(C) ரூ. 1,248, 4% (D) ரூ. 1,650, 6%

54. The cost price of 20 articles is the same as selling price of $x$ articles. If the profit is 25% then the number of articles is

(A) 25 (B) 18

(C) 16 (D) 15

20 பொருட்களின் வாங்கிய விலையும் $x$ பொருட்கள் விற்ற விலையும் சமம். இதில் லாப சதவீதம் 25% எனில் விற்ற பொருட்களின் எண்ணிக்கையானது

(A) 25 (B) 18

(C) 16 (D) 15

55. The cost price of 16 notebooks is equal to the selling price of 12 notebooks. Find the gain percent

(A) 24%
(B) $33\frac{1}{3}$%
(C) 16%
(D) 12%

16 நோட்டுப் புத்தகங்களின் அடக்கவிலை 12 நோட்டு புத்தகங்களின் விற்பனை விலைக்குச் சமம். இதன் இலாப சதவீதம் காண்க

(A) 24%
(B) $33\frac{1}{3}$%
(C) 16%
(D) 12%

**186. The cost price of 21 pens is equal to the selling price of 20 pens. The loss or gain percent is**

**(A) 20%**

**(B) 5%**

**(C) 10%**

**(D) 15%**

**21 பேனாக்களின் அடக்கவிலை 20 பேனாக்களின் விற்ற விலைக்குச் சமம் எனில் இலாப அல்லது நட்ட சதவீதம் ஆனது**

**(A) 20%**

**(B) 5%**

**(C) 10%**

**(D) 15%**

**148. If the cost of 12 Articles is equal to the selling price of 10 Articles, the profit percent in the transaction is**

**(A) 18%**
**(B) $16\frac{2}{3}$%**
**(C) 20%**
**(D) 25%**

**12 பொருள்களின் வாங்கிய விலைக்கு 10 பொருள்களின் விற்ற விலைக்கு சமம் எனில் இந்த வியாபாரத்தில் கிடைக்கும் இலாபம் சதவீதம்**

**(A) 18%**
**(B) $16\frac{2}{3}$%**
**(C) 20%**
**(D) 25%**

52. Cost of 3 pencils and 5 erasers is ₹ 34 and cost of 2 pencils and 7 erasers is ₹ 30 then cost of a pencil is

(A) ₹ 8 (B) ₹ 5

(C) ₹ 4 (D) ₹ 2

3 எழுதுகோல்களும் 5 அழிப்பான்களும் சேர்ந்து விலை ₹ 34 மேலும் 2 எழுதுகோல்களும் 7 அழிப்பான்களும் சேர்ந்து விலை ₹ 30 எனில் ஒரு எழுதுகோலின் விலை என்ன?

(A) ₹ 8 (B) ₹ 5

(C) ₹ 4 (D) ₹ 2

36. **5 pencils and 4 erasers cost ₹ 13 whereas 9 pencils and 5 erasers cost ₹ 19 then the price of 6 pencils and 3 erasers is**

**(A) ₹ 9** **(B) ₹ 12**

**(C) ₹ 15** **(D) ₹ 18**

**ஐந்து வரைகோல் மற்றும் நான்கு அழிப்பானின் விலை ₹ 13 அதே போல் ஒன்பது வரைகோல் மற்றும் ஐந்து அழிப்பானின் விலை ₹ 19 எனில் ஆறு வரைகோல் மற்றும் மூன்று அழிப்பானின் விலை என்ன?**

**(A) ₹ 9** **(B) ₹ 12**

**(C) ₹ 15** **(D) ₹ 18**

147. **Three shirts and four pants cost Rs. 3,680. Two pants and one shirt cost Rs. 1,680. Find the costs of a shirt and a pant?**

**(A) Rs. 320 and Rs. 680** **(B) Rs. 300 and Rs. 600**

**(C) Rs. 400 and Rs. 450** **(D) Rs. 310 and Rs. 690**

**மூன்று சட்டைகள் மற்றும் நான்கு கால் சட்டைகளின் விலை ரூ. 3,680 ஆகும். இரண்டு கால் சட்டைகள் மற்றும் ஒரு சட்டையின் விலை ரூ. 1,680 ஆகும். ஒரு சட்டை மற்றும் ஒரு கால் சட்டையின் விலைகள் யாவை?**

**(A) ரூ. 320 மற்றும் ரூ.680** **(B) ரூ. 300 மற்றும் ரூ. 600**

**(C) ரூ. 400 மற்றும் ரூ. 450** **(D) ரூ. 310 மற்றும் ரூ. 690**

57. A man sells two wrist watches at ₹ 594 each. On one he gains 10% and on the other he loses 10%. Find his gain or loss percent. On the whole

(A) 12% loss
(B) 1% loss
(C) 1% profit
(D) 12% profit

இரு கைக்கடிகாரங்கள் ஒவ்வொன்றையும் 594 ரூபாய்க்கு ஒருவர் விற்றார். இவ்வாறு விற்றதில் ஒன்றில் 10% லாபமும், மற்றதில் 10% நட்டமும், அவருக்கு ஏற்பட்டது. மொத்தத்தில் அவருக்கு ஏற்பட்ட லாபம் அல்லது நட்ட சதவீதத்தைக் காணவும்.

(A) 12% நட்டம்
(B) 1% நட்டம்
(C) 1% லாபம்
(D) 12% லாபம்

183. A man sells two wrist watches at Rs. 594 each. On one he gains 10% and on the other he loses 10%. Find his gain or loss percent on the whole

(A) Loss % = 90%
(B) Gain % = 5%
(C) Loss % = 1%
(D) Loss % = 7%

இரு கைக்கடிகாரங்கள் ஒவ்வொன்றையும் ரூ. 594–க்கு ஒருவர் விற்றார். இவ்வாறு விற்றதில் 10% இலாபமும் மற்றதில் 10% நட்டமும் அவருக்கு ஏற்பட்டது. மொத்தத்தில் அவருக்கு ஏற்பட்ட இலாபம் அல்லது நட்ட சதவீதம் காண்க

(A) நட்ட சதவீதம் = 90%
(B) இலாபம் சதவீதம் = 5%
(C) நட்ட சதவீதம் = 1%
(D) நட்ட சதவீதம் = 7%

54. Even after giving a discount of 20% the shop owner gets a profit of 10%. If the marked price is Rs. 2,200 then the cost price is

(A) Rs. 1600 (B) Rs. 1760

(C) Rs. 1800 (D) Rs. 2080

20% தள்ளுபடிக்கு பின்னரும் வியாபாரிக்கு 10% லாபம் கிடைக்கிறது. குறித்த விலை ரூ. 2,200 எனில் அடக்க விலை என்ன?

(A) ரூ. 1600 (B) ரூ. 1760

(C) ரூ. 1800 (D) ரூ. 2080

53. The market price of new brand watch is 15% higher than its original price. Due to increase in demand, the price is further increased by 10%. How much profit will be obtained in selling the watch? (in %)

(A) 25% (B) 35%

(C) 26.5% (D) 27%

ஒரு புதிய கடிகாரத்தின் விற்பனை விலை அதன் உண்மை விலையை விட 15% அதிகம், மேலும் அதன் தேவையைப் பொருத்து மீண்டும் 10% அதிக விலையேற்றம் செய்யப்பட்டால், அந்த கடிகாரத்தை விற்கும் போது கிடைக்கும் மொத்த லாபம் எவ்வளவு சதவீதம்?

(A) 25% (B) 35%

(C) 26.5% (D) 27%

60. If a discount of 20% is given then selling price of an article is ₹ 24. What would be the selling price if the discount of 30% is given?

(A) ₹ 21 (B) ₹ 30

(C) ₹ 36 (D) ₹ 20

தள்ளுபடி 20% தரப்படும் போது ஒரு பொருளின் விற்ற விலை ₹ 24. அதே பொருளுக்கு 30% தள்ளுபடி தரப்பட்டிருப்பின் விற்பனை விலை என்னவாக இருந்திருக்கும்?

(A) ₹ 21 (B) ₹ 30

(C) ₹ 36 (D) ₹ 20

147. A dealer allows a discount of 20% and still gains 10%. What is the cost price of the book which is marked at Rs. 440?

(A) 396 (B) 320

(C) 352 (D) 376

ஒரு புத்தகத்தின் விலையில் 20% தள்ளுபடி செய்தாலும் ஒரு வியாபாரிக்கு 10% இலாபம் கிடைக்கிறது. அப்புத்தகத்தின் குறித்த விலை ரூ. 440 எனில் அதன் அடக்க விலை யாது?

(A) 396 (B) 320

(C) 352 (D) 376

4. A reduction of 20% in the price of rice enables a person to buy 3.5 kg more rice for ₹ 770. The original price of rice per kg is

(A) ₹ 55 (B) ₹ 45

(C) ₹ 37 (D) ₹ 65

அரிசியின் விலை அதன் உண்மை விலையை விட 20% குறைக்கப்பட்டால், ஒருவர் 770 ரூபாய்க்கு தான் வாங்க வந்ததை விட 3.5 கிலோ அரிசி அதிகம் வாங்க முடியும் என்றால், ஒரு கிலோ அரிசியின் உண்மை விலை என்ன?

(A) ₹ 55 (B) ₹ 45

(C) ₹ 37 (D) ₹ 65

61. A man's wages were decreased by 50% and the reduced wages were increased by 50%. He has

(A) no profit and no loss

(B) a loss of 0.25%

(C) a loss of 2.5%

(D) a loss of 25%

ஒருவரின் கூலி 50% குறைக்கப்படுகிறது. பின்னர், குறைக்கப்பட்ட கூலியில் 50% அதிகரிக்கப்படுகிறது எனில் அவருக்கு,

(A) இலாபமும் இல்லை நட்டமும் இல்லை

(B) 0.25% நட்டம்

(C) 2.5% நட்டம்

(D) 25% நட்டம்

96. If 20% discount on the marked price and then another 5% discount on the new price is given then the overall discount is

(A) 22% (B) 23.5%

(C) 24% (D) 25%

குறித்த விலையிலிருந்து 20% தள்ளுபடியும், இந்த புது விலையிலிருந்து மேலும் 5% தள்ளுபடியும் கொடுக்கப்பட்டால் மொத்தத்தில் தள்ளுபடி

(A) 22% (B) 23.5%

(C) 24% (D) 25%

85. A tradesman sold an article at a loss of 20%. If the selling price had been increased by Rs. 100, these would have been a gain of 5%. What was the cost price of the article?

(A) Rs. 100 (B) Rs. 200

(C) Rs. 400 (D) Rs. 500

ஒரு வணிகர் ஒரு பொருளை 20% நட்டத்தில் விற்றார். அவரது விற்பனை விலை 100 ரூபாய் அதிகரித்திருந்தால், 5% லாபம் இருந்திருக்கும். பொருளின் அடக்கவிலை என்ன?

(A) ரூ. 100 (B) ரூ. 200

(C) ரூ. 400 (D) ரூ. 500

41. The marked price of an article is 20% more than its cost price. A discount of 10% is given. After discount the price is Rs. 518.40. What is the cost price?

(A) 480 (B) 576

(C) 596 (D) 598

ஒரு பொருளின் அடக்கவிலையை விட குறித்த விலை 20% அதிகம். 10% தள்ளுபடி தரப்படுகிறது. தள்ளுபடிக்கு பின் பொருளின் விலை ரூ.518.40. பொருளின் அடக்கவிலை என்ன?

(A) 480 (B) 576

(C) 596 (D) 598

158. An article is marked 50% above the cost price upon the production price and a discount of 40% is allowed. Then the gain or loss percentage is

(A) 10% loss
(B) 12% loss
(C) 9% loss
(D) 8% gain

ஒரு பொருள் அதன் உற்பத்தி விலையிலிருந்து 50% அதிகமாக விற்பனை விலையாக குறிக்கப்படுகிறது. மேலும் அதில் 40% தள்ளுபடி அறிவித்தால் அவருக்கு கிடைக்கும் லாபம்/நட்டம் சதவீதம்

(A) 10% நட்டம்
(B) 12% நட்டம்
(C) 9% நட்டம்
(D) 8% லாபம்

165. A man buys 3 tables and 12 chairs for Rs. 2,400. He sells the tables at a profit 20% and chairs at a profit of 10% and makes a total profit of Rs.300. At what price did he buy one table?

(A) ₹ 100
(B) ₹ 200
(C) ₹ 300
(D) ₹ 250

ஒருவன் 3 மேஜைகள் மற்றும் 12 நாற்காலி இருக்கைகள் ஆகியவற்றை ரூ.2,400 க்கு வாங்குகிறான். மேஜைகளை 20% லாபத்திற்கும் நாற்காலி இருக்கைகளை 10% லாபத்தில் விற்கும் போது ரூ.300 லாபமாக பெறுகிறான் எனில் ஒரு மேஜையை எந்த விலைக்கு வாங்கியிருப்பான்?

(A) ₹ 100
(B) ₹ 200
(C) ₹ 300
(D) ₹ 250

72. An increase of 20% in the price of mangoes enables a person to purchase 4 mangoes less for 40. The price of 15 mangoes before increase was.

(A) ₹ 10
(B) ₹ 15
(C) ₹ 20
(D) ₹ 25

மாம்பழத்தின் விலை 20% அதிகரித்தால் ஒருவர் 40 ரூபாய்க்கு நான்கு மாம்பழங்கள் குறைவாகத்தான் வாங்க முடியும் எனில், விலையேற்றத்திற்கு முன்னால் 15 மாம்பழங்களின் விலை என்னவாக இருந்திருக்கும்.

(A) ₹ 10
(B) ₹ 15
(C) ₹ 20
(D) ₹ 25

43. A shop owner gives one fifth of his profit to his Manager. The Manager gives one third of the money he received to his assistant. Half of the amount received by the assistant is Rs. 100. What is the Shop owner's profit?

(A) 2,000 Rs. (B) 3,000 Rs.

(C) 4,000 Rs. (D) 6,000 Rs.

ஒரு கடைக்காரர் தனது லாபத்தில் ஐந்தில் ஒரு பங்கை தன் மேலாளருக்கு கொடுக்கிறார். மேலாளர் தனக்கு கிடைத்ததில் மூன்றில் ஒரு பங்கை தன் உதவியாளருக்கு தருகிறார். உதவியாளர் பெற்ற தொகையில் பாதி ரூ. 100. கடைக்காரரின் லாபம் என்ன?

(A) 2,000 ரூ. (B) 3,000 ரூ.

(C) 4,000 ரூ. (D) 6,000 ரூ.

93. A Trader has 500 kg of rice, part of which he sells at 8% profit and the rest at 18% profit. He gains 10% on the whole. The quantity sold at 18% profit is

(A) 100 kg (B) 200 kg

(C) 300 kg (D) 400 kg

ஒரு வணிகர் தன்னிடமுள்ள ஒரு பகுதி அரிசியை 8 சதவிகித லாபத்திற்கும் மீதியை 18 சதவிகித லாபத்திற்கும் விற்பனை செய்ததில் மொத்தமுள்ள 500 கிலோ அரிசிக்கு 10 சதவிகித லாபம் பெற்றார். அவர் 18 சதவிகித லாபத்திற்கு விற்ற அரிசியின் அளவானது?

(A) 100 கிலோ (B) 200 கிலோ

(C) 300 கிலோ (D) 400 கிலோ

**32. A vendor offers a discount of 10% on a watch and still makes a profit of 26%. What is the actual cost price if the marked price is Rs. 840?**

**(A) 600 (B) 700**

**(C) 800 (D) 650**

**ஒரு விற்பனையாளர், கைக்கடிகாரத்தின் மீது 10% தள்ளுபடி தந்த பிறகும் 26% லாபம் அடைகிறார். அதன் குறித்த விலை ரூ. 840 எனில் அதன் வாங்கிய விலை என்ன?**

**(A) 600 (B) 700**

**(C) 800 (D) 650**

184. A shopkeeper mixes 20 kgs of rice which cost Rs. 5 per kg with 35 kg of rice which cost Rs. 7 per kg. Then he sells the mixture at Rs. 6.50 per kg. Find his profit percentage.

(A) 3%

(B) $3\frac{40}{67}\%$

(C) $4\frac{34}{69}\%$

(D) $3\frac{43}{69}\%$

ஒரு கடைக்காரர் தன்னிடம் இருந்த ரூ. 5 அடக்க விலையுள்ள 20 கி அரிசியையும், ரூ. 7 அடக்க விலையுள்ள 35 கிலோ அரிசியையும் ஒன்றாக கலந்து கிலோ ரூ. 6.50க்கு விற்றால் அவருக்கு கிடைக்கும் இலாபத்தின் சதவீதம் என்ன?

(A) 3%

(B) $3\frac{40}{67}\%$

(C) $4\frac{34}{69}\%$

(D) $3\frac{43}{69}\%$

179. Kumar's monthly salary is Rs. 54,000. He spends $\frac{1}{6}^{th}$ of his salary as rent, $\frac{1}{3}^{rd}$ as education, $\frac{1}{4}^{th}$ as transport and the remaining as his savings. The amount saved by him as

(A) Rs. 12,000

(B) Rs. 12,500

(C) Rs. 13,000

(D) Rs. 13,500

குமார் என்பவரின் மாத சம்பளம் ரூ. 54,000. அதில் $\frac{1}{6}$ பாகம் வாடகைக்கும், $\frac{1}{3}$ பாகம் கல்விக்கும், $\frac{1}{4}$ பாகம் போக்குவரத்திற்கும் செலவு செய்கிறார். மீதியை சேமித்து வைக்கிறார் எனில் சேமிக்கும் தொகை

(A) ரூ. 12,000

(B) ரூ. 12,500

(C) ரூ. 13,000

(D) ரூ. 13,500

126. The cost of pen is ₹ 10 and the cost of pencil is ₹ 3.50. Find the ratio of the cost of pencil and pen.

(A) 6 : 20

(B) 20 : 7

(C) 7 : 20

(D) 6 : 7

ஒரு பேனாவின் விலை ₹ 10 மற்றும் ஒரு பென்சிலின் விலை ₹ 3.50 எனில் பென்சிலின் விலைக்கும் பேனாவின் விலைக்கும் உள்ள விகிதத்தை காண்க.

(A) 6 : 20

(B) 20 : 7

(C) 7 : 20

(D) 6 : 7

170. If personal income is Rs. 57,000, consumption is Rs. 43,000, personal income taxes are Rs. 9,000, personal interest payments are Rs. 1,000 and personal savings is Rs. 4,000, disposable income equals

(A) Rs. 53,000

(B) Rs. 48,000

(C) Rs. 47,000

(D) Rs. 43,000

ஒருவரின் தனிநபர் வருமானம் ரூ. 57,000, அவரின் நுகர்வு ரூ. 43,000, தனிநபர் வருமான வரி ரூ. 9,000, தனிபட்ட வட்டி பணம் ரூ. 1,000 மற்றும் தனிநபர் சேமிப்பு ரூ. 4,000 எனில், அவரின் செலவழிப்பு வருமானமானது

(A) ரூ. 53,000

(B) ரூ. 48,000

(C) ரூ. 47,000

(D) ரூ. 43,000

129. The cost of four Tamil books and 3 English Dictionary books is ₹ 750. The cost of a English Dictionary is 2 times of the cost of a Tamil book. What is the total cost of a Tamil book and a English Dictionary

(A) ₹ 200

(B) ₹ 225

(C) ₹ 250

(D) ₹ 275

நான்கு தமிழ் புத்தகங்கள் மற்றும் 3 ஆங்கில அகராதியின் (English Dictionary) மொத்த விலை ₹ 750. ஒரு ஆங்கில அகராதியின் விலையானது ஒரு தமிழ் புத்தகத்தின் விலையை போல் இரு மடங்கு எனில் ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில அகராதியின் மொத்த விலை என்ன?

(A) ₹ 200

(B) ₹ 225

(C) ₹ 250

(D) ₹ 275

132. Two dozen sweets are divided between Rajneesh and Kumar, so that they get 25% and 75% respectively. Find the number of sweets for Kumar?

(A) 16 (B) 17

(C) 18 (D) 19

ரஜ்னீஷ், குமார் இருவரும் 2 டஜன் மிட்டாய்களை 25%, 75% என்றவாறு பிரித்துக் கொள்கின்றனர். குமார் பெறும் மிட்டாய்களின் எண்ணிக்கைக் காண்க.

(A) 16 (B) 17

(C) 18 (D) 19

169. Rao, Kaul, Bansal and Agarwal enter into a partnership, Rao, Kaul, Bansal subscribe $\frac{1}{3}$rd, $\frac{1}{4}$th, $\frac{1}{5}$ th of the investment respectively and Agarwal the rest. If the profit of ₹ 9,84,000 is divided according to their investment, what is Agarwal's share of profit?

(A) ₹ 1,64,000

(B) ₹ 2,13,200

(C) ₹ 3,28,000

(D) ₹ 1,96,800

ராவ், கவுல், பன்சால் மற்றும் அகர்வால் ஆகியோர் கூட்டாக வியாபாரம் செய்கின்றனர். மொத்த முதலீட்டில் ராவ், கவுல், பன்சால் ஆகியோர் முறையே $\frac{1}{3}$ பங்கு, $\frac{1}{4}$ பங்கு, $\frac{1}{5}$ பங்கும் மீதியை அகர்வால் அவர்களும் முதலீடு செய்கின்றனர். லாபத்தொகை ₹ 9,84,000 ஆனது முதலீட்டுக்குத் தகுந்தாற்போல் பங்கீடு செய்யப்பட்டால் அகர்வால் அடைந்த லாபத் தொகை எவ்வளவு?

(A) ₹ 1,64,000

(B) ₹ 2,13,200

(C) ₹ 3,28,000

(D) ₹ 1,96,800

123. The price of 2 sarees and 4 shirts is Rs. 1,600 with the same money, one can buy 1 saree and 6 shirts. If one wants to buy 12 shirts, how much shall he have to pay?

(A) 1200

(B) 2400

(C) 4800

(D) 3600

2 புடவை மற்றும் 4 சட்டைத் துணிகளின் மொத்த விலை ரூபாய் 1,600. இதே ரூபாயில் 1 புடவை மற்றும் 6 சட்டைத் துணியை வாங்கலாம் எனில், 12 சட்டைத்துணிகள் மட்டும் வாங்க எவ்வளவு பணம் தேவைப்படும்?

(A) 1200

(B) 2400

(C) 4800

(D) 3600

169. An employee spends on an average Rs. 2,500 for the first 8 months of a year and Rs. 1,500 for the next 4 months. If he saves Rs. 10,000 that year, then his monthly income is Rs.

(A) 2,500

(B) 3,000

(C) 2,600

(D) 3,200

ஒரு பணியாளர் வருடத்தின் முதல் 8 மாதங்களில் சராசரி ரூ. 2,500-யும் அடுத்த 4 மாதங்களில் சராசரி ரூ. 1,500-ம் செலவு செய்கிறார். அவர் அந்த ஆண்டில் ரூ. 10,000 சேமித்தார் என்றால், அவரது மாத ஊதியம் ———————— ஆகும்.

(A) 2,500

(B) 3,000

(C) 2,600

(D) 3,200

117. If a particular amount distributed to each of 14 students is Rs. 80 more than the amount distributed to each of 18 students, find the amount

(A) Rs. 5040

(B) Rs. 3150

(C) Rs. 2520

(D) Rs. 4200

ஒரு குறிப்பிட்ட தொகையை 18 மாணவர்களுக்கு பிரித்து கொடுப்பதை போல் அதே தொகையை 14 மாணவர்களுக்கு பிரித்து கொடுத்தால் ஒரு மாணவனுக்கு ரூ. 80 அதிகமாக கிடைக்கிறது எனில் அந்த தொகையை காண்க

(A) ரூ. 5040

(B) ரூ. 3150

(C) ரூ. 2520

(D) ரூ. 4200

51. When an amount was distributed among 14 boys, each of them got ₹ 80 more than the amount received by each boy when the same amount is distributed equally among 18 boys. What was the amount?

(A) ₹ 5,010 (B) ₹ 5,020

(C) ₹ 5,040 (D) ₹ 5,000

ஒரு குறிப்பிட்ட தொகையை 14 பையன்களிடையே பங்கிடும் பொழுது, அதே தொகையை 18 பேரிடம் சமமாகப் பங்கிடும் பொழுது கிடைப்பதை விட ஒவ்வொருவரும் ₹ 80 அதிகம் பெறுகிறார்கள். தொகை என்ன?

(A) ₹ 5,010 (B) ₹ 5,020

(C) ₹ 5,040 (D) ₹ 5,000

76. The income in 3 months of a person is same as his expenditure in 4 months. If his annual saving is ₹ 600. What is his monthly income?

(A) ₹ 200 (B) ₹ 250

(C) ₹ 300 (D) ₹ 600

ஒரு மனிதரின் மூன்று மாத வருமானம் அவரின் நான்கு மாத செலவுக்கு சமம் எனில் அவருடைய வருட சேமிப்பு ரூ. 600 ஆக இருந்தால் அவரின் மாத வருமானம் எவ்வளவு?

(A) ரூ. 200 (B) ரூ. 250

(C) ரூ. 300 (D) ரூ. 600

35. Three partners $A, B, C$ invest Rs. 36,000, Rs. 45,000 and Rs. 54,000 respectively in a business. Out of a total profit of Rs. 37,500 $C$'s share is

(A) Rs. 12,500 (B) Rs. 15,000

(C) Rs. 10,000 (D) Rs. 15,500

$A, B, C$ ஆகிய மூவர் பங்குதாரர்களாக உள்ள ஒரு வியாபாரத்தில் அவர்கள் முறையே ரூ. 36,000, ரூ. 45,000 மற்றும் ரூ. 54,000 என்றவாறு முதலீடு செய்துள்ளனர். மொத்த இலாபம் ரூ. 37,500-ல் $C$ -ன் பங்கு

(A) ரூ. 12,500 (B) ரூ. 15,000

(C) ரூ. 10,000 (D) ரூ. 15,500

92. On selling a chair at 7% loss and a table at 17% gain, a man gains 296. If he sells the chair at 7% gain and table at 12% gain then he gains Rs. 400. The actual price of the table is

(A) Rs. 1,400 (B) Rs. 2,400

(C) Rs. 400 (D) Rs. 800

நாற்காலியை 7% நஷ்டத்திற்கும், மேஜையை 17% இலாபத்திற்கும் ஒருவன் விற்றால் அவன் ரூ. 296 இலாபமடைகிறான். இதையே நாற்காலி 7% இலாபத்திற்கும் மேஜை 12% இலாபத்திற்கும் விற்றால் அவன் பெறும் இலாபம் ரூ. 400 எனில் மேஜையின் உண்மையான விலை

(A) ரூ. 1,400 (B) ரூ. 2,400

(C) ரூ. 400 (D) ரூ. 800

199. From Tiruchy bus stand if we buy 3 tickets to Karur and 2 tickets to Pudukkottai, the total cost is Rs. 85, but if we buy 2 tickets to Karur and one ticket to Pudukkottai, the total cost is Rs. 50. Find the fares from Tiruchy to Karur and to Pudukkottai.

(A) Rs. 15, Rs. 20

(B) Rs. 17, Rs. 23

(C) Rs. 19, Rs. 31

(D) Rs. 30, Rs. 20

திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து கரூருக்கு மூன்று பயணச்சீட்டுகளும், புதுக்கோட்டைக்கு இரண்டு பயணச்சீட்டுகளும் வாங்க மொத்தக் கட்டணம் ரூ. 85, ஆனால், கரூருக்கு இரண்டு பயணச்சீட்டுகளும், புதுக்கோட்டைக்கு ஒரு பயணச்சீட்டும் வாங்க மொத்தக்கட்டணம் ரூ. 50. திருச்சியிலிருந்து கரூர் மற்றும் புதுக்கோட்டை செல்ல கட்டணங்களைக் காண்க.

(A) ரூ. 15, ரூ. 20

(B) ரூ. 17, ரூ. 23

(C) ரூ. 19, ரூ. 31

(D) ரூ. 30, ரூ. 20

32. A man earns Rs. 20 on the first day and spends Rs. 15 on the next day. He again earns Rs. 20 on the 3rd day and spends Rs. 15 on the fourth day. If he continues to save like this, how soon will he have Rs. 60 in hand?

(A) On 17th day (B) On 22nd day

(C) On 30th day (D) On 40th day

ஒரு மனிதன் முதல் நாளில் ரூ. 20 சம்பாதித்து அடுத்த நாள் ரூ. 15 செலவு செய்கிறார். மீண்டும் மூன்றாம் நாள் ரூ. 20 சம்பாதித்து நான்காம் நாள் ரூ. 15 செலவிடுகிறார். இவ்வாறே அவர் சேமிப்பைத் தொடர்கிறார் எனில், ரூ. 60 எவ்வளவு சீக்கிரம் அவரது கையில் இருக்கும்?

(A) 17 ஆவது நாளில் (B) 22 ஆவது நாளில்

(C) 30 ஆவது நாளில் (D) 40 ஆவது நாளில்

78. 400 square metres have to be painted. 1 litre of paint A costs 150 Rs and can be used to paint 4 sq.m. 1 litre of paint B costs Rs. 200 and can paint 6 sq.m. Paint C costs Rs. 250 per litre and each litre paint C can be used to paint 8 sq.m. least cost of painting 400 sq.m. is

(A) Rs. 10,000 (B) Rs. 12,500

(C) Rs. 15,000 (D) Rs. 16,250

400 சதுர மீட்டர் பரப்பளவு வர்ணம் பூச வேண்டியுள்ளது. A வகை பெயிண்ட் லிட்டருக்கு 150 ரூபாய்; 1 லிட்டர் கொண்டு 4 சதுர மீட்டர் பூசலாம். B வகை லிட்டர் 200 ரூபாய்; லிட்டருக்கு 6 சதுர மீட்டர் பூசலாம். C வகை லிட்டர் 250 ரூபாய்; லிட்டருக்கு 8 சதுர மீட்டர் பூசலாம். மிக குறைந்த விலையில் 400 சதுர மீட்டரை வர்ணம் பூச ஆகும் செலவு

(A) ரூ.10,000 (B) ரூ. 12,500

(C) ரூ. 15,000 (D) ரூ. 16,250